# யாழ்நாதம்



இதழ் 18

2012



வெளியீடு

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் - கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08.03.2011
## சர்வதேச மகளிர் தின நிகழ்வுகளின் நிழல்கள்

(குறிப்பு பக்கம் 4)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."
"It ought to be beautiful, I live here."

இதழ் 18 யாழ் நாதம் 2012

உள்ளே:


❖ கல்லூரிக் கீதம் .................................................. 2

❖ மலர் ஆசிரியரின் செய்தி .................................................. 3

❖ (எட்டும் அறிவினில்..)சர்வதேச மகளிர் தின நிகழ்வு ............ 4

❖ தலைவியின் செய்தி .................................................. 6

❖ செல்வி சற்சொரூபவதி நாதனின் உரை ...................... 8

❖ பிரதம அதிதி திருமதி இராஜநாயகி சர்வலோகநாயகத்தின் உரை .... 11

❖ எனது நெஞ்சை விட்டகலா யாழ் இந்து மகளிர் கல்லூரி ...... 12

❖ எனது கல்லூரி வாழ்க்கையை நினைத்துப்பார்க்கின்றேன் ...... 16

❖ இலத்திரனிய ல் கழிவுகள் .................................................. 18

❖ A Sure Way to Life & Riches by Seven Great Men. ....20

❖ சிவன் கோயில் (இரத்தினபுரி) ...................................... 21

❖ HSE Alert for Car Riders. .................................. 23

❖ Asparagus - who knew? . ............................ 25

❖ யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு. பதினெட்டாம் ஆண்டு அறிக்கை (2011) ......................... 28


வெளியீடு:-
'யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி – எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி – உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி – உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி – இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி – வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி – உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி – ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி – இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி – உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி – என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி – நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி – உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ – உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியையின் செய்தி

**யா**ழ் நாத இதழினை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து இவ்விதழ் சிறப்புடன் வெளிவருவதற்கு அயராது உழைத்தவர் திருமதி சிவகாமி அம்பலவாணர் ஆவார். இதன் ஆசிரியராக 13 வருடங்கள் கடமையாற்றியுள்ளார். அவர் தனது மகளுடன் வசிப்பதற்கு நியூசிலாந்து சென்றார்.

அதன் பின்னர் இந்தப் பணியினை அவரின் தங்கையான திருமதி விமலா மணிவாசகன் 4 வருட காலம் திறன்பட பணிசெய்து வந்தார். அவருக்கு தனிப்பட்ட சில காரணங்களினால் இப்பணியினை தொடரமுடியவில்லை.

இது எமது சங்க ஆவணமாக வெளிவருவதால் இதன் வெளியீடு தடைப்படக் கூடாது என்பதால் இப்பணியினை நான் பொறுப்பேற்று இவ்விதழ் வெளியீட்டினை தொடருகின்றேன்.

இந்த இதழ் வெளியிடுவதற்கு உதவிய அனைத்து அங்கத்தவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக. இன்று கலை நிகழ்ச்சி நடத்தும் எமது பாடசாலை மாணவர்களுக்கும் எமது நன்றி.

யாழ் நாதம் இதழ்களை அழகுற அமைத்த, ஆண்டுதோறும் வெளியிட உதவிவரும் யூனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் பொ. விமலேந்திரன் அவர்களுக்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**திருமதி அபிராமி கயிலாசபிள்ளை**
மலர் ஆசிரியை

24, Deal Place A
Colombo 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை"

**யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் நடாத்திய சர்வதேச மகளிர்தின நிகழ்வு**

யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு நடாத்திய சர்வதேச மகளிர் தின விழா நிகழ்வு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 08.03.2011 செவ்வாய்கிழமை மாலை 6.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை நடைபெற்றது.

இவ் விழாவிற்கு சங்கத்தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக திருமதி இராஜநாயகி சர்வலோகநாயகம் வருகை தந்திருந்தார்.

சிறப்பு நிகழ்வாக யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகளான திருமதி சத்தியலக்சுமி சிவலிங்கம், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் ஆகியோர் சிறந்த பெண்மணிகளாக பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

திருமதி கௌரி ரமணா அவர்கள் "அனைவருக்கும் இந்த இனிய மாலைப் பொழுதில் எமது வணக்கத்தினை தெரிவித்து, யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் சங்கம் – கொழும்பு நடாத்தும் சர்வதேச மகளிர் தினத்திற்கு வருகை தந்த அனைவரையும் அன்புடன் வரவேற்று" நிகழ்வினைத் தொகுத்து வழங்கினார்.

மங்கலவிளக்கேற்றல் :- மங்கலவிளக்கேற்றியோர் பிரதம அதிதி திருமதி இராஜநாயகி சர்வலோகநாயகம், தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், திரு வி.கயிலாசபிள்ளை (தலைவர் இந்துமாமன்றம்), உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, திரு எஸ். சூரியதேவா, யாழ் இந்து மகளிர் கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராஜ் சிறந்த பெண்மணிகளாக கௌரவிக்கப்பட்ட திருமதி சத்தியலக்சுமி சிவலிங்கம், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம், யாழ் நாத இதழ் ஆசிரியை திருமதி விமலா மணிவாசகன் பொருளாளர் செல்வி சிவமலர் சுப்பிரமணியம், செயலாளர் திருமதி கௌரி ரமணா ஆகியோர் ஆவார்.

திருமதி சிவசெல்வி சிவலோகநாதன் அவர்கள் தேவாரம் பாடினார்கள். கல்லூரிக்கீதம் எல்லோரும் சேர்ந்து பாடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் விழா கலாபூசணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்த குருவின் வீணை இசையுடன் ஆரம்பமானது. இவர் எம் கல்லூரியின் பழைய சிரேஸ்ட மாணவியும், சிறந்த சமயச்சொற்பொழிவாளருமாவார். இவருடன் பழையமாணவியான செல்வி வினுதா வாமதேவனும் வீணை வாசித்தார். பக்கவாத்தி கலைஞர் பிரம்மஸ்ரீ ஞான பூபதி க. சுவாமிநாதன் சர்மா அவர்கள் மிருதங்கம் வாசித்தார்கள்.

"சகல கலாவித்தகி", "கலாபூசணம்", தன் இனிய குரலின் மூலம் வானொலி அறிவிப்பாளராக எல்லோரின் மனதைக் கவர்ந்தவரும் எம் சங்கத்தின் முதற் தலைவியுமான சற்சொரூபவதி நாதன் தலைமை உரையாற்றினார்.

பல மன்றங்களில் தலைவி, செயலாளர், பொருளாளர் என பொறுப்பான பதவிகளிருந்து துடிப்பாக சேவை செய்பவரும், பார் புகழ் சேவகி" சங்க உபதலைவி திருமதி அபிராமி கயிலாசபிள்ளை உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் (லண்டன்) தலைவி, பிரதம அதிதி திருமதி இராஜநாயகி சர்வலோகநாயகம் உரையாற்றினார்.

சிறப்பு நிகழ்ச்சியான பழைய மாணவிகள் கௌரவம் தொடர்ந்தது. திருமதி சத்தியலக்சுமி அவர்களை செல்வி சற்சொரூபவதி நாதனும், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரத்தை திருமதி தற்பராதேவி தில்லைநாதனும் கௌரவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து திருமதி சத்தயலக்சுமி சிவலிங்கமும், திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரமும் ஏற்புரை வழங்கினார்கள்.

அடுத்த நிகழ்ச்சியாக யாழ் நாத வெளியீடு நடைபெற்றது. முதற் பிரதியை இதழ் ஆசிரியை விமலா மணிவாசகன் பிரதம அதிதி திருமதி இராஜநாயகி சர்வலோகநாயகத்திற்கு வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து திருமதி திலகா விஜயரட்னத்தின் பிரதியாக்கத்திலும் செல்வி சற்சொரூபவதி நாதனின் நெறியாள்கையிலும் பழைய மாணவிகளின் நடிப்பிலும் "சூ மந்திரகாளி" எனும் நாடகம் இடம் பெற்றது.

அப்பா– செல்வி சீதா செல்லையா, அம்மா– செல்வி எழில்மொழி ராஜகுலேந்திரா, மந்திரவாதி திருமதி பஞ்சலக்சுமி பத்மநாதன், நண்பிகள் சர்வேஸ்வரி சிதம்பரநாதன், கௌரி ரமணா, பிள்ளைகள் தனுஷன், நிரோஷினி என்பனர் நடித்தார்கள்.

இறுதியும் கண்ணுக்கு விருந்தாகவும் திருமதி கீதாஞ்சலியின் மாணவிகளின் எழுச்சி நடனங்கள் நடைபெற்றது.

இறுதி நிகழ்வாக நன்றியுரை:– எமது சங்கத்தின் செயலாளர் திருமதி கௌரி ரமணா அவர்கள் "நன்றி மறப்பது நன்றன்று" என்று கூறி தனதும் மற்றும் சங்க அங்கத்தவர்களின் நன்றிகளை சகலருக்கும் கூறினார்.

**மகளிர் தின விழா தேவாரத்துடன் இனிதே நிறைவேறியது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவியின் செய்தி

சங்கத்தின் வருடாந்த இதழாக மலர்ந்து மணம்பரப்பும் யாழ்நாதம் 17வது இதழுக்கு செய்தி வழங்குவது மகிழ்ச்சியைத் தருகின்றது. எமது மன்றத்தின் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றிய திருமதி சிவகாமி அம்பலவாணரின் எண்ணக் கருவில் உருவாகி அவரது முயற்சியில் எமது சங்கப் பணிகளின் பதிவேடாகவும் விளங்கும் யாழ்நாதம், அவர் நாட்டை விட்டு அவுஸ்திரேலியா சென்றதும் தங்கை விமலா மணிவாசகத்தின் பொறுப்பில் சிறிதும் செழுமை குன்றாது சில ஆண்டுகள் பிரசுரமானது. அதன் பின் இந்த ஆண்டுக்கான வெளியீட்டை உபதலைவி திருமதி அபிராமி கைலாசபிள்ளையிடம் ஒப்படைத்தோம். அவரும் தமது பல பணிகளுக்கு மத்தியில் யாழ்நாதத்தை வெளியிட அயராது உழைத்துள்ளார். இம்முறையும் இதழ் கவர்ச்சிகரமாக எம் கைகளில் தவழ இருக்கின்றது.

சங்க உறுப்பினர்கள் எல்லோரும் விடயங்களை தருவதில் போதிய உற்சாகம் காண்பிக்காமை பெரும் குறைபாடாகவே உள்ளது. தமது எழுத்துத் திறனைப் பெண்கள் வெளிக்கொணரச் செய்யும் ஒரு ஏடாக யாழ்நாதம் விளங்கவேண்டும் என்ற எமது பேரவா நிறைவுபெற வருங்காலத்திலாவது எமது உறுப்பினர்கள் முன்வருவார்கள் என்று நம்புகிறோம்.

இந்த ஆண்டிலும் வழமைபோல் சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளோம் கல்லூரி மாணவர்களை கொழும்புக்கு வரவழைத்து கலை நிகழ்ச்சிகளை மேடையேற்ற உள்ளோம். அத்துடன் எமது கல்லூரியின் புகழ்பூத்த மாணவிகளும் மன்ற நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு தருபவர்களையும் இத் தினத்தில் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற இருக்கின்றது. திருமதி மல்லிகா சரவணபவான், திருமதி ருக்மணி அரசரத்தினம் ஆகியோர் கௌரவிக்கப்பட இருக்கிறார்கள்.

எமது கல்லூரியின் அதிபர் திருமதி பேரின்பநாதன் கலை நிகழ்வை மேடையேற்றும் எமது விருப்பத்திற்கு பூரண ஒத்துழைப்புத் தர முன்வந்துள்ளமைக்கு முதலில் நன்றி செலுத்துகிறோம் கல்லூரி மாணவர்கள் 2011 இலும் தமது பேச்சு, இசை, விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்தி அகில இலங்கை ரீதியிலான பல போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்றுக் கல்லூரிக்கு புகழ் சேர்த்துள்ளார்கள். ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பழைய மாணவிகளாகிய எங்களது உதவி என்றும் வழங்கப்படும். தாயை மறக்க முடியாது போன்று எமக்குக் கல்விச் செல்வத்தைத் தந்த எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியையும் எம்மால் மறக்க முடியாது. அதன் வளர்ச்சியில் என்றும் எமது பங்கு தொடரும்.

சங்கத்தின் கூட்டங்களுக்கு வருகை தந்தும், சகல நடவடிக்கைகளிலும் பங்குபற்றியும், ஏன் சங்கம் மேடையேற்றிய நாடகத்திலும் நடித்துப் பாராட்டுப் பெற்ற அங்கத்தவர்களுக்கும், எமது நன்றிகள் முக்கியமாக முதுகெலும்புபோல் ஓடி ஓடி சகல செயற்பாடுகளையும் குறைவில்லாது நிறைவேற்றிய எமது இளம் அங்கத்தவரும் செயலாளருமான திருமதி கௌரி ரமணாவுக்கு சங்கத்தின் பாராட்டும் நன்றியும் உரித்தாகட்டும் பழைய மாணவிகள் பலர் கொழும்பில் உள்ளனர் அவர்கள் அனைவரும் சங்கத்தின் உறுப்பினராகி அதனை மேலும் செழுமையாக்க வேண்டும்.

**சற்சொரூபவதி நாதன்**
ப. மா. சங்கத் தலைவி

## கல்லூரியின் சிறந்த மாணவிகள்

| | |
|---|---|
| 2001 | செல்வி காயத்திரி சிற்சபேசன் |
| 2002 | செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன் |
| 2003 | செல்வி நிலக்ஷி மகாதேவா |
| 2004 | செல்வி துளசி கந்தசாமி |
| 2005 | செல்வி பாமினி பரஞ்சோதி |
| 2006 | செல்வி கபிலினி அருட்செல்வன் |
| 2007 | செல்வி கோபிகா குலசிங்கம் |
| 2008 | செல்வி மோகனரஞ்சனி ரவீந்திரன் |
| 2009 | செல்வி செல்வலச்சுமி செல்வராஜன் |
| 2010 | செல்வி நாராயணி வெற்றிவேல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி சற்சொரூபவதி நாதன் ஆற்றிய உரை

**வணக்கம்**

இன்று உலகெங்கும் 100வது சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. மகளிருக்குப் பிரச்சனைகள் உள்ளது என்பதை வெளியுலகிற்கு தெரிவித்து தீர்வுகாணவென ஆரம்பிக்கப்பட்ட தினம் 100 ஆண்டுகளாகியும் அனுஷ்டிக்கப்படுகின்றது என்றும் பெண்களின் பிரச்சனைகள் இன்னும் தீர்த்துவைக்கப்படவில்லை என்றே எண்ணவேண்டியுள்ளது. இதற்கு இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் எடுக்குமோ தெரியவில்லை. பிரச்சனைகள் தீராவிட்டாலும் மகளீருக்கு வலுவூட்ட இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றமை பெரிதும் உதவுகின்றது. இல்லாவிடில் Global Patue தோல்மால் பங்காளியாக பெண்களை ஐ.நா. பிரகடனப்படுத்தி கௌரவமான தொழில்கள் பெறுவதற்கு வழியமைத்தல் என்பதை தொனிப்பொருளாக்கியுள்ளது.

ஆம் பெண்கள் தொழில் பார்க்கும் உரிமையை கொண்டிருந்தாலும் அவர்களால் கௌரவமாக தொழில் புரிய முடிகிறதா? இதுவே கேள்வி. உடல் முழுவதும் ஆணிகள் ஏற்றப்பட்டு தொழில் பார்த்த இடத்திலிருந்து நாடு திரும்பும் பெண்களுக்கான அவல நிலை பற்றி பல சம்பவங்களை கேட்கும் குரூர நிலையில் எமது நாடு இருப்பதை சிறிது சிந்தித்துப்பாருங்கள்.

எமது பழைய மாணவிகள் சங்கம் தொடர்ந்து மகளீர் தினத்தை சில ஆண்டுகளாக அனுஷ்டித்து வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன் முதல் மரியாதை எனக்குக் கிடைத்தது. ஊடகத்துறையில் 40ஆண்டுகளை நான் பூர்த்தி செய்ததை கௌரவித்து சங்கம் சகலகலாவித்தகிப் பட்டம் சூட்டிக் கௌரவித்தது. அதன் பின்னர் இவ்வாறு மகளீர் நிறுவிய எமது மன்ற அங்கத்தவர்களுக்கு தொடர்ந்து கௌரவம் கிடைக்க வகை செய்துள்ளோம்.

இன்றைய நிகழ்விற்கு பிரதம அதிதியாக எமது கல்லூரியில் முற்று முழுதாக கல்வி பயின்று இன்று லண்டனில் பழைய மாணவிகள் சங்கத் தலைவியாகத் திகழும் திருமதி இராஜநாயகி சர்வலோகநாயகம் வந்துள்ளார். அவரை நாமெல்லோரும் சந்திரா என்றழைப்போம். இவர் யாழ் முன்னாள் மாநகர முதல்வர் எம் துரைராஜாவின் புதல்வி. கல்லூரி நாட்களில் இவர் பார்வதி இல்லத் தலைவியாக இருந்தார். விளையாட்டு வீரங்கனையாக உயரம் பாய்தல் நீளபாய்தல் 100மீற்றர் ஓட்டம் சைக்கிள் ஓட்டம் என்று அவர் காண்பித்த பல திறமைகளை நான் நேரில் பார்த்திருக்கின்றேன். பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுமுகப்பரீட்சை எழுதுவதற்கு தயாராக இருந்த நிலையில் திடீரென்று இவர் திருமணப்பந்தத்தில் இணைந்துவிட்டார். அரச உயர் பதவி வகித்த திரு. சர்வலோகநாயகத்தை மணந்து ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாக இல்லறம் நடத்தினார். இவருக்கு முப்பத்தாறு வயதாக இருக்கையிலே கணவர் திடீர் மரணமானார். கணவர் Scholarship இல் லண்டன் சென்ற சமயம் சந்திரா அவருடன் சென்ற போது சிவில் சேவை பரீட்சை எழுதி சுகாதார சமூக சேவைத்திணைக்களத்தில் பணியாற்றியிருந்தார். கணவர் இறந்த பின் இலங்கையில் ஆசிரியராகத் தொழில் புரிந்தார். RCTM பாடசாலை பணியில் இருந்த காலத்திலேயே சமூகசேவைகளில் ஈடுபட்டார். முதியோர் பராமரிப்பு மனிதநேய அமைப்புப் பணிகள். திடீரென உதவிகள் இப்படிப் பல. இப்பொழுது லண்டன் பழைய மாணவ சங்கத்தலைவியாக பொறுப்பேற்றுள்ளார். இந்தச் சங்கம் எமது கல்லூரியின் வளர்ச்சியில் அதிக நாட்டம் கொண்டுள்ளது. அது வழங்க உத்தேசித்துள்ள நிதி உதவி பற்றி தலைவி சந்திரா அறிவிப்பார் என்று எதிர்பார்க்கின்றோம். அவரும் சங்கத்தின் செயலாளர் திருமதி வசந்தா அவர்களும் இந் நிகழ்விற்கு வருகைதந்துள்ளமை எமக்கு மகிழ்ச்சி தருகின்றது.

இனி இன்றைய முக்கிய நிகழ்ச்சியாக நாம் இரு மூத்த சங்க உறுப்பினர்களை சிறந்த பெண்மணிப் பட்டம் சூட்டிக் கௌரவிக்க இருக்கின்றோம். அவர்களைப் பற்றி சுருக்கமாக முதலில் குறிப்பிடுகின்றேன். ஒருவர் எனது மதிப்பிற்கும் அபிமானத்திற்கும் உரிய திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கம் கம்பீரமான குரலில் எமது நிகழ்வில் தேவாரம் பாடுபவார். இசையில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். இவரும் கல்லூரி நாடகங்களில் இசை வல்லமையால் எல்லோர் மனதையும் கவர்ந்தவர். எப்பொழுதும் சிரித்து கலகலப்பாக இருப்பார். எட்டுப் பிள்ளைகளின் அம்மா. அவர்களில் பெண் பிள்ளைகள் மிகவும் பிரசித்தமானவர்கள். ஒருவர் சித்திரக்கலையில் தேர்ந்து பலாலியில் விரிவுரையாளராகப் பணிபுரிகிறார். இன்னொருவர் தமிழ்நாட்டில் அக்கல்வியை மேலும் வளர்க்கின்றார். மற்றையவர் எமக்கு நன்கு தெரிந்த பிரபல பாடகி திருமதி பராசத்தி விநாயகமூர்த்தி இப்பொழுது கனடாவில் சத்தி Music Academy யில் தொழில் புரிகின்றார். இரண்டு பெண்கள் ஆசிரியைகள் ஒரு மகள் பிரபல வைத்தியர். நியூசிலாந்தில் பணிபுரிந்துவிட்டு இப்பொழுது கனடாவில் வைத்தியராக கடமைபுரிகின்றார். சத்தியலெட்சுமி வில்லுப்பாட்டு மேடைநாடகங்கள் எல்லாம் சமீப காலமாக வளர பங்கு பற்றியவர். இவரின் செய்முறைகளை T.V யில் அடிக்கடி பார்க்கலாம்.

அடுத்து திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் உருவில் சிறியவர். ஆனால் எமது சங்க நடவடிக்கைகளில் அயராது பெரும் பங்கு ஆற்றுபவர். கல்லூரி நாட்களில் துடிப்புடன் செயற்பட்டு நிதி திரட்டுவதில் முன்னின்றவர். கல்லூரியில் சமயத்துறைத் தூதுவராக அவரைக் கருதுகின்றோம். அவர் குமரி முதல் இமயம் வரை அடிக்கடி தலயாத்திரை செல்வார். இப்பவும் யாழ்ப்பாணம் முதல் கதிர்காமம் வரை பலருடன் சேர்ந்து யாத்திரை மேற்கொள்வார். தம் தலயாத்திரை அனுபவங்களை யாழ்நாதத்தில் சுவைபட எழுதியுள்ளார். இவரது இரு புதல்வர்களில் ஒருவர் பிரபல வைத்தியர். அவர் மனைவியும் பல்வைத்தியர். மற்றையவர் பொறியியல் துறையில் ஈடுபட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைப் போல் சென்ற ஆண்டு எம்மால் கௌரவிக்கப்பட்ட இருவர் இன்னும் தமது பங்களிப்பை செய்ய முன்வந்துள்ளனர். நிகழ்ச்சியில் வீணாகானம் இசைத்த பிரபல கல்விமான் ஒய்வுற்ற அதிபர் கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு மற்றையவர் பிரபல ஆங்கில தமிழ் எழுத்தாளர் ஆசிரியராக தடம் பதித்து ஒரு நூலையும் வெளியிட்டுள்ள திருமதி திலகா விஜயரத்தினம். அவர் இன்று மேடையேற்றப்படவிருக்கும் சூமந்திரகாளி நாடகத்தை எழுதித்தந்துள்ளார். எமது மன்ற அங்கத்தவர்கள் பாத்திரமேற்று நாடகத்தில் நடிக்கின்றனர்.

இன்று எமது வருடாந்த சஞ்சிகையான யாழ் நாதமும் வெளியிடப்பட இருக்கின்றது. திருமதி சிவகாமி அம்பலவாணரின் Brain Child ஆன யாழ்நாதத்திற்கு இன்று வயது பதினாறு ஆரம்ப கால ஆசிரியை இந்நிகழ்வில் இல்லாத போதிலும் அவரது தங்கை திருமதி விமலா மணிவாசகன் அதனை சிறப்புற தொடர்ந்து வெளியிட்டு வருகின்றார். இவரும் பொருளாளர் செல்வி சிவமலர் சுப்பிரமணியம் அத்துடன் துணைத்தலைவர்களாக விளங்கும் திருமதி அபிராமி கைலாசபிள்ளை, திருமதி தயாநிதி செல்வநாயகம், திருமதி தற்பராதேவி, செயலாளர் கௌரி ரமணா ஆகியோரும் ஏனைய உறுப்பினர்களும் தமது பங்களிப்பைச் செய்து எனக்கு பூரண ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பேரின்பநாதன் எமது சங்கத்துடன் இணைந்த கல்லூரி மாணவிகள் கலை நிகழ்ச்சியொன்றை கொழும்பில் மேடையேற்ற முயற்சி மேற்கொள்ளுவதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்றைய நிகழ்வில் எமது பழைய மாணவியாக இல்லாத பிரபல நடன ஆசிரியை திருமதி கீதாஞ்சலி சுதர்ஷனின் மாணவர்களது நடன நிகழ்ச்சி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***படிப்பானது அறிவுதர வேண்டிய அளவே தரும். படித்தவற்றை சிந்தித்தலே படித்தவற்றை நமக்குச் சொந்தமாக்கும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதி திருமதி இராஜநாயகி சர்வலோகநாயகத்தின் உரை

**கொ**ழும்பு பழைய மாணவர் சங்கத்திற்கு எனது மனமார்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தப் பெண்களால் பெருமை கொண்டவர்கள் அநேகர் There is a woman behind every great man ஆனால் There is a man behind the great woman என்று யாரும் சொன்னதில்லை. இந்தச் சபையில் இருக்கும் மகளீரை நோக்கும் போது இலங்கை இந்துமகளீர் சங்கத்தலைவர் சற்சொரூபவதி அன்று பாடசாலையில் ஒரு நட்சத்திரமாக பிரகாசித்தார் இன்று தன் உயிர்உள்ளவரை தன் பாடசாலை முன்னேற்றத்திற்காக பாடுபட்டுக்கொண்டிருக்கின்றார். அவர் எங்கள் பெண் சமூகத்திற்கு பெருமை தேடித்தரும் சாதனையாளராக விளங்குகின்றார். அடுத்து எங்கள் சகோதரி அபிராமி கயிலாசபிள்ளை உலகெங்கும் தொடர்புகொண்டு மனிதநேயம் என்னும் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார். அவர்கள் செய்யும் தொண்டுகளை எடுத்துக்கூறுவதற்கு வார்த்தைகளே இல்லை.

எமது சங்கத்தினர் யாவரிலும் முக்கிய தூணாக விளங்குபவர் திருமதி அபிராமி கைலாசபிள்ளை உலக புகழ்பூத்த மாணவியான இவருக்கு எமது சங்கம் ஒரு மகளீர் தினத்தில் உரிய கௌரவம் அளித்தது. மனிதநேய அமைப்பில் கணவருடனும் மகனுடனும் இணைந்து எமது நாட்டில் தமிழர்களுக்கும் அநாதரவான பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் வயோதிபர்களுக்கும் அரிய தொண்டு ஆற்றுகின்றார்கள் என்பதை பெருமையுடனும் நன்றியுணர்வுடனும் கூறியேயாகவேண்டும். திருக்கேதீச்சர திருப்பணிச் சபை மூலம் ஆலயம் புனர்நிர்மானம், சிவராத்திரி போன்ற விசேட தினங்களில் அந்தப் பழம்பெரும் கோயிலில் சகல பூசைகளும் அன்னதானமும் சிறப்புற நடைபெறுவதற்கு பங்காற்றுகிறார். அகில இலங்கை இந்துமாமன்றம் மூலம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு ஒரு பாசமுள்ள அன்னையாக உழைத்தார். இரத்மலானையில் சத்தி இல்லம் – இதில் சிறார்கள் தங்கி படிக்க வசதிகள் ஏற்படுத்தியுள்ளார்.

உதாரணமாக என் வாழ்வு திடீர் என்று அஸ்தமித்த பொழுது என் குழந்தைகளை தன் பிள்ளைகள் போல் பாவித்து அவர்கள் மேல்படிப்பிற்கு உதவிசெய்தார். இன்று அமெரிக்கா முதல் அவுஸ்திரேலியா வரை Accountants. Engineers போன்ற தலைமைப் பதவிகளை வகிக்கின்றார்கள். இதற்கு வார்த்தைகளால் நன்றி கூறமுடியாது. அவர்கள் இப்போது எண்ணற்ற அநாதைப்பிள்ளைகளுக்கு வாழ்வளித்திருக்கின்றார்.

என்னைப் பிரதம அதிதியாக அழைத்த இச் சங்கத்தின் எனது சகோதரிகளுக்கு நன்றி கூறி இச்சங்கம் மேலும் வளர்ந்து எமது பாடசாலைக்கு பல உதவிகள் புரிய அருள் புரிய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது நெஞ்சை விட்டகலா யாழ் இந்து மகளிர் கல்லூரி

அந்தப் பாடசாலையும் நானும் கனவுகண்டது போல் அந்தக் கல்லூரித் தாயின் மண்ணில் கால் பதித்தோம். ஆடினோம் பாடினோம் பறவைகள் போல் பறந்தோம். என்னவென்று சொல்வது எப்படித்தான் சொல்வது. அது "ஒரு பொன்னான காலம்"

நான் (1940ல்) இந்துக்கல்லூரி கலவன் பாடசாலையில் எனது கல்வியைத் தொடர்ந்தேன். நான் ஆரம்பித்த காலத்தில் அங்கு ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் ஒன்றாகப்படித்தோம். இந்துக்கல்லூரியின் மூலையில் ஒரு கறுத்தக்கொழும்பான் மாமரமும் ஒரு கொண்டல் மரமும் அமைந்திருந்தன. அங்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் வகுப்புக்கள் இருந்தன. அங்கு தலைமை உபாத்தியாயர். கணபதிப்பிள்ளை. சோமஸ்கந்தர் இரத்தினசபாபதி பெரியக்கா சின்னக்கா என்று பலர் கற்பித்தார்கள். அங்கு முறையே கல்வி பயின்று அதே இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் ஒரு மூலையில் நாலாம் வகுப்பைத் தொடர்ந்தோம் பின் Hindu Board இனால் ஒரு மகளீர் கல்லூரி நிர்மாணிக்கப்பட்டது. அங்கு சில நாட்கள் மட்டும் கல்வியைத் தொடர்ந்தோம். பின் விளையாட்டு மைதானத்திற்கு முன் கஸ்தூரியார் வீதியிலுள்ள திரு. திருமதி பொன்னுசாமி என்பவர்களினது நாற்சார வீட்டில் மகளீர் கல்லூரியைத் தொடர்ந்தோம். அப்போது எங்கள் கல்லூரி அதிபர் காயத்திரி பொன்னுத்துரை. அவர் மிகவும் நல்ல நிர்வாகத்திறன் உடையவர்.

அதன் பின் பிறவுண் வீதியைச் சேர்ந்த திரு. சிவகுருநாதர் திருமதி விசாலாட்சி அவர்கள் மனமுவந்து நடுத் தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் கோவிலுடன் அன்பளிப்பாக பாடசாலைக்கு அந்தப் பெரிய பனைவளவை தந்து உதவினார்கள்.

அதன் பின் அங்கு பனங்குற்றியினால் கொட்டில்கள் போடப்பட்டு ஓலையால் வேயப்பெற்று மணல் பரப்பி. சிறுசிறு வகுப்புகளாக கதிரை மேசை போடப்பட்டு இந்து மகளீர் கல்லூரி எனப் பெயர்பெற்றது. நான் (1942ம் ஆண்டு யாழ் இந்து மகளீர் கல்லூரி ஆரம்பித்த காலத்தில் முதல் முதலில் அன்றைய நாள் மாணவிகள் எல்லோரும் அணிவகுத்து கல்லூரிக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள். அதில் (Flag) கொடியுடன் சென்றவர்களில் நானும் ஒருத்தி என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். அன்று தான் அங்கு முதன் முதலில் கால் பதித்தோம். அது ஒரு "பொன்நாள்" என்று சொன்னால் மிகையாகாது. அங்கு கொட்டில் வகுப்பில் கல்வி பயின்றோம். பல அதிபர்களால் என் மனதைக் கவர்ந்தவர் திருமதி கிளாரா மொறவாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Motwani) அவர் ஒரு ஆங்கிலப் பெண்மணி. எங்களுக்கு வெள்ளைச்சட்டை (Frock) போட்டு அழகாக பாடசாலைக்கு வரும்படி செய்தவரும் அவரே! சிறந்த நிர்வாகி.

அதன் பின் பாடசாலை கட்டுவதற்காக (fund Collection) பணம் சேர்த்துக்கொடுத்தோம். அளுக்கு ஒருகாட் (Card) ஆக 25சதம் புள்ளடி போட்டு ரூபா 25ஆக பாடசாலைக்கு அத்தனை பேரும் ஒவ்வொரு (காட்) ஆக 1945இல் சேர்த்துக்கொடுத்தோம். பாடசாலை மாணவர்கள் சேர்த்த காசில் கட்டிடவகுப்பு அறைகள் என்பன மெல்ல மெல்லமாக கட்டப்பட்டது. சீமேந்தினால் ஒரு மேடையும் ஆய்வுகூடமும் கட்டப்பட்டது.

பின்பு எங்கள் கல்லூரி மேடையில் பல நாடகங்கள், நடனங்கள் (Concert) என்று பல விஷேசங்களும் நடந்தேறின. பின் நடனமணிகள் லலிதா, பத்மினி, ராகினி என்று பல பிரபல நடனமணிகள், நடிகைகள் வந்துபோனார்கள். இப்படிப்பல இசைப்போட்டிகளும் நடந்தேறின.

பின் இந்தியாவைச் சேர்ந்த தெலுங்குப் பெண்மணி திருமதி சரோஜினி ராவ் M.A.LT அவர்கள் எங்கள் பாடசாலைக்கு அதிபராக வந்தார். அவர் அழகான தோற்றமும் நிமிர்ந்த பார்வையும் மிடுக்கான நடையும், பார்ப்பவரைக் கவரும் விவேகமும் உடையவர். "சிறந்த பெண்மணி" எங்கள் கல்லூரிக்கு நல்ல பெயரும் புகழும் தேடித்தந்தவரும் அவரே!

அவரின் காலகட்டத்தில் தான் எங்கள் பாடசாலை நன்கு மிளிர்ந்தது. கலை கலாச்சாரம். பண்பாடு அத்துடன் இந்துசமய முறைப்படி அனுஷ்டானம் ஆச்சாரம், ஆராதனைகளும் நடைபெற்றன. அழகாக இருக்க கற்றுக்கொடுத்தவரும் அவரே. எங்கள் கல்லூரி (College Motto) "It ought to be beautiful. I live here" என்று இங்கு இருக்கின்றேன். இவ்விடத்தில் அழகு இருக்கும் என்று அறிவு புகட்டியவரும் அவரேதான் என்றால் அது மிகையாகாது. பாடசாலைக்கு வரும் பொழுது, நம்நாட்டுப் பாணியில் சேலை உடுத்தி செம்பருத்திப் பூவும் தலையில் சூடி குடையுடன் திருமதி சரோஜினி ராவ் அவர்கள் வந்தால் சொல்லவும் வேண்டுமா? அம்மன் வருவது போல் காணும் காட்சியைக் கண்டால் நாங்கள் எல்லோரும் பயபக்தியுடன் அமைதியாக வகுப்பறைக்குள் சென்று விடுவோம். சரோஜினி ராவ் அதிபர் அவர் தான் எங்களுக்கு முறையே (Health science, Home science) சுகாதாரமும் மனையியலும் ஆங்கிலத்தில் கற்பித்தார். அப்போது தமிழையும் சமயத்தையும் தவிர மற்றப்பாடம் எல்லாம் ஆங்கில மொழியில் (Englis Medium) தான். அப்போது வயது வந்தவர்கள் பாவாடை சட்டை தாவணி அணிந்து வர வேண்டும். அதுவும் எங்கள் கல்லூரியின் நிறம் (White & Green) வெள்ளையும் பச்சையும் இப்பவும் அந்த அதிபரை மறக்கவும் முடியாது, மறக்கவும் மாட்டோம். இப்படி அந்தக் கால கட்டத்தில் (Ruler) அடிமட்டம், அடி வாங்கி நாம் இனிமேல் குழப்படி செய்ய மாட்டோம் என்று ஆயிரம் தடவைகள் எழுதியும் இருக்கின்றோம். அப்போதுதான் செல்வி சாந்தா, செல்வி லீலா, செல்வி. லக்ச்சி, செல்வி பொன்னையா, செல்வி பதி, செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பு, செல்வி ராதா சோமசுந்தரம், செல்வி பத்மாவதி ஐயாத்துரை, செல்வி முத்தையா, செல்வி பத்மாவதி இராமநாதன் என்று பலர் மிளிர்ந்தார்கள்.

பின்பு பெரிய வகுப்பிற்கு வந்த பிறகு சரோஜினி ராவ் அவர்களின் தலைமையில் ஒரு பிரமாண்டமான காணிவல் நடைபெற்றது. களியாட்ட விழாவில் (Merry go Round) (Well of Death) (Joint wheel) இன்னும் பல விதமான விநோத விளையாட்டுக்கள். களியாட்டங்கள் நடன நாடகங்கள் என பல நிகழ்ச்சிகள் நடந்தன. எங்கள் பாடசாலையில் காணிவல் (Carnival) ஒன்று நடக்கின்றது என்றால் சொல்லவும் வேண்டுமா? ஒரே குதூகலம். கொண்டாட்டம்தான் அங்கு நானும் (TomBola) Ticket விற்பனையாளராகவும் இருந்தேன். இப்படிப் பல உதவிகள் புரிந்தோம் (Carnival Helpers) ஆகவும் இருந்தேன். பின் நிறையப் பணம் கிடைத்தது. அந்தப் பணத்தைக் கொண்டு கல்லூரிக்கு மிக உயர்ந்த பிரமாண்டமான சுற்று மதில் கட்டப்பட்டது.

பின் நான் S.S.C வகுப்பு படிப்பை முடித்துக்கொண்டதும், எனக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. 1954ல் எனது பாடசாலை வாழ்க்கையை முடித்துக்கொண்டு திருமணவாழ்க்கையில் (1957ல்) ஈடுபட்டேன். அதன் பிறகு Brown வீதியில் உள்ள 134ம் நம்பர் வீடு ஒன்று கட்டி குடி புகுந்தோம். சொல்லவும் வேண்டுமா? பழையபடி இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில் வந்து வசித்தோம் அங்கு திருமதி சொக்கலிங்கம் திருமதி குஞ்சக்கா கருணானந்தன். திருமதி லீலா பாலசிங்கம், திருமதி திலகா விஜயரட்ணம் இன்னும் பல பழைய மாணவிகளும் அங்கு இருந்தார்கள். அப்போது இந்து மகளீர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் சைவ மகளிர் மன்றத்திலும் சேர்ந்து உதவிகள் பல புரிந்தோம்.

பின் போரின் காரணமாக (1991ம் ஆண்டு) யாழ்ப்பாணத்தை விட்டு கொழும்புக்கு வந்து சேர்ந்தோம். அதன் பிறகு கணவரின் சுகயீனம் காரணமாக கொழும்பிலேயே தங்கி விட்டோம். பிறகு 1993ம் ஆண்டு தொடக்கம் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் கொழும்புக்கிளை சங்க உறுப்பினராகவும், இலக்கியக் குழுவிலும் பங்காற்றியுள்ளேன். இன்னும் கல்லூரிக்கும், சங்கத்திற்கும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்துகொண்டே இருப்பேன். தற்போது கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு முன்பாக Deans Road, Maradana Fountain House Lane வீட்டில் மகனுடன் வசிக்கின்றேன்.

அந்நாட்களில் கொடியுடன் சென்ற மாணவிகள் இன்னும் மிளிர்கின்றார்கள் என்றால் அந்தக் கல்லூரித் தாயின் (சரஸ்வதி) படைப்பு. அவர்கள் எல்லோரும் எங்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் எல்லோரும் இன்றுபோல் என்றும் நீடுழி வாழ்க! பல்லாண்டு, பல்லாண்டு "நலமாக வாழ்க" வாழ்க என்று வாழ்த்துகின்றேன். மற்றும் என்னைக் கௌரவித்த தலைவி "சகலகலாவித்தகி" சற்சொரூபவதி நாதன் அவர்களுக்கும், "மனிதநேயம்" கொண்ட திருமதி அபிராமி கைலாசபிள்ளை அவர்களுக்கும், பிரதம விருந்தினர் திருமதி இராஜநாயகி சர்வலோக நாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கும், இதழ் ஆசிரியர் விமலா மணிவாசகர் அவர்களுக்கும், சங்க உறுப்பினர்களுக்கும், வீணை இசைத்தவர்களுக்கும், நாட்டிய நாடகமணிகள், எழுச்சி நடனமாடியவர்களுக்கும், ஆசிரியர் கீதாஞ்சலி அவர்களுக்கும், மற்றும் மண்டபத்திற்கும் வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும், படித்தபாடசாலையைப் பற்றி எழுதத் தூண்டிய ஜெகானந்த குரு இராஜேஸ்வரி அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தனை மலர்களும் நன்கு மலர்ந்து நறுமணம் பரப்பி நிற்பது என்றால் அதற்கு ஈடு இணையாகாது.

"நன்றி"

**திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்,**
பழைய மாணவி சங்க உறுப்பினர்,
யாழ் இந்து மகளிர் கல்லூரி,
கொழும்புக்கிளை.

எங்கள் சங்கம் ஸ்தாபித்த இணையத்தளமான
web www.jhlc.lk
mail info@jhlc.lk
தொடர்ந்து நிர்வகிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கல்லூரி வாழ்க்கையை நினைத்துப்பார்க்கின்றேன்

**யா**ழ் இந்து மகளிர் கல்லூரி ஆரம்பித்ததும் நானும் அக்கல்லூரியின் மாணவியாகச் சேர்ந்தேன் அந்த நாட்களை நினைத்துப்பார்க்கையில் மனதிற்கு குதூகலத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், ஆங்கிலம், குடியியல், தாவரவியல், விஞ்ஞானம், வரைதல், தையல், சங்கீதம், சிங்களம் சமஸ்கிருதம் போன்ற பாடங்கள் யாவற்றையும் ஆங்கிலத்தில் படிக்கவேண்டிய நிர்ப்பந்தம். என்னால் இவற்றிற்கு ஈடுகொடுக்கமுடியவில்லை.

உண்மையைச் கூறப்போனால் நான் ஆறாம் வகுப்பில் (1st Form) மூன்று வருடம் படித்தேன். உங்களால் அந்தச் சூட்சுமத்தை விளங்கிக்கொள்ள முடியும் என்று நம்புகின்றேன். நான் ஒரு விதத்திலும் கவலைப்படவில்லை. மிகவும் சந்தோசமாகவே ஒரே வகுப்பில் இருந்து படித்தேன்.

எனக்கு மிகவும் பிடித்த பாடம் தாவரவியல், சமஸ்கிருதம், சித்திரம் இவ்வளவு கடினமான பாடத்தை எவ்வளவு சுலபமாகப் படித்தேன் என்பதை நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்வீர்கள். சமஸ்கிருதம், சித்திரம், சங்கீதம் தான் என் மூச்சு. மிக நன்றாகப் பாடுவேன். வரலாறு புவியியல் போன்ற பாடங்களில் மிகவும் குறைந்த புள்ளிகள் தான் எடுப்பேன்.

வகுப்பில் எனது தோழிகள் கமலா, இந்திராணிக்கு ஏதாவது பகிடிகளைக் கூறி அவர்களைச் சிரிக்கப்பண்ணிவிடுவேன். அதன் விளைவாக அவர்களும் என்னுடன் சேர்ந்து வகுப்பில் இருந்து வெளியேற்றப்படுவர். தினமும் வகுப்பறைக்கு வெளியே நிற்பது சாதாரண காட்சியாகிவிடும். எங்களது தொல்லை தாங்கமுடியாது வகுப்பு ஆசிரியை எங்களை கல்லூரி முதல்வரின் காரியாலயத்திற்கு அனுப்பிவிடுவார்.

இக்கட்டுரையை வாசிப்பவர்களுக்கு ஒரு சிறிய பணிவான வேண்டுகோள். என்கதையைக் கேட்டு நீங்களும் ஒரு முறை சிரியுங்கள் நான் முதல் கூறியது போல் ஆறாவது வகுப்பில் மூன்று வருடங்கள் தொடர்ந்து படித்தேன். ஏனென்றால் என்னால் அந்த வகுப்பிற்குரிய பாடத்திட்டங்களை குறிப்பிட்ட கால எல்லைக்குள் படித்து முடிக்க இயலாமை தான் காரணம். படிப்பதும் மூளையில் தங்காது. ஏதோ ஒரு வழியில் வெளியேறிவிடும் அது எனது தப்பா அல்லது எனது பெற்றோரின் தப்பா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

